பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று (1.2.2026) சென்னை, எழும்பூர் அருங்காட்சியக வளாகத்தில் நிறுவப்பட்டு வரும் கார்ல் மார்க்ஸ் அவர்களின் திருவுருவச் சிலையின் கட்டுமான பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, பொதுப்பணித்துறை கண்காணிப்புப் பொறியாளர் எஸ். கார்த்திகேயன் மற்றும் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

திருவள்ளூர் மாவட்டம், ஆவடி வட்டம், அயப்பாக்கம் டி.என்.எச்.பி. பகுதியில் நேற்று (01.02.2026) பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறை சார்பில் தமிழ்நாடு முழுவதும் 642 துணை சுகாதார நிலையங்களை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் சா.மு.நாசர் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், சட்டமன்ற உறுப்பினர்கள் க.கணபதி (மதுரவாயல்), துரை சந்திரசேகர் (பொன்னேரி), பொது சுகாதாரம் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

கழகத் தலைவர் தலைமையில் – நாளை நடைபெறும் அண்ணா நினைவு நாள் மாபெரும் அமைதிப் பேரணியில்

சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

மாவட்டச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள்!

சென்னை, பிப்.2-

"கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில், நாளை நடைபெறும், அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணியில், சென்னை தெற்கு மாவட்டக் கழகத்தினர் பெருந்திரளாகப் பங்கேற்பீர்!" என, மாவட்டச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

"ஆற்றோரத்திலே ஆடு மேய்த்து, மலைச்சரிவிலே, மாடு மேய்த்து மானையும், பன்றியையும், வெட்டித்தின்று நெருப்பையும்,நீரையும் கும்பிட்டு சோமரசமும், சுராபான மும் பருகி, பவுண்டரீக யாக மும், பிறவும் செய்து கிடந்த கூட்டம், கோட்டைகளைத் தகர்த்து ,கொத்தளங்களைத் தூளாக்கி, படைபல வென்று, தடைபலத் தகர்த்து , தன்மானத்தையே, தரணி வாழ் மக்கள் போற்ற வேண்டும் எனப் பரணிபாடி, வாழும் தமிழர்களான நம்மை நிந்திப்பதா?"

எனக்கேட்டு, நமக்கெல்லாம் சுயமரியாதை உணர்வை ஊட்டிய பேரறிஞர் அண்ணா அவர்களின் 57ஆவது ஆண்டு நினைவு நாளையொட்டி அவருக்கு மரியாதை செலுத்துகிற வகையில் தமிழ்நாட்டின் முதலமைச்சர் கழகத்தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நாளை (03.02.2026) காலை சரியாக 7.00 மணி அளவில் அமைதிப் பேரணி நடைபெற உள்ளது.

வாலாசா சாலையில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா சிலையில் இருந்து கடற்கரை நினைவிடம் நோக்கி செல்கின்ற இந்த அமைதிப் பேரணியில், சென்னைத் தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைக்கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதி மற்றும் ஒன்றிய செயலாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள்,வட்டக் கழக செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள்,

இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, மகளிர் தொண்டர் அணி, தொழிலாளரணி, தொண்டரணி, தொழில்நுட்ப அணி, வழக்கறிஞர் அணி, பொறியாளர் அணி, இலக்கிய அணி, ஆதிதிராவிடர் நலக் குழு, சிறுபான்மை நல உரிமைப் பிரிவு, மீனவரணி, நெசவாளர் அணி, வர்த்தகர் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி,மருத்துவர் அணி, விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி, ஆட்டோ ஓட்டுனர் அமைப்பு தொ.மு.ச உள்ளிட்ட அனைத்து அணிகளின் மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மற்றும் கழகத்தின் அனைத்து நிலை சார்ந்த செயல்வீரர்கள், வீராங்கனைகள் அனைவரும் பெருமளவில் பங்கேற்று வீரவணக்கம் செலுத்திட வேண்டுகிறேன்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

உலக நாடுகள் பலவும் பாராட்டும் வகையில்

முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டங்களைத் தீட்டி வருகிறார்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

சேலம்,பிப.2-

தமிழ்நாடு பட்டுவளர்ச்சி துறை சார்பில் தமிழகம் முழுவதும் உள்ள 3050 பட்டு விவசாயிகளுக்கு 36 கோடியே 48 லட்சம் மதிப்பில் நவீன பட்டுகுழு வளர்ப்பு தளவாடகங்கள் மற்றும் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா சேலம் பெரியார் பல்கலை கழக கூட்டரங்கில் நடைபெற்றது.

சேலம் மாவட்ட வருவாய் அலுவலர் ரவிக்குமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பல்வேறு தளவாடங்கள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி தமது வாழ்த்துக்களை தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் அமைச்சர் ராஜேந்திரன் பேசும் போது, தமிழ்நாடு முதலமைச்சர் எல்லாருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் சிறப்பான ஆட்சியை நடத்தி வருகிறார் என்றும் இந்தியாவிலேயே நம்பர் ஒன் மாநிலமாக தமிழ்நாடு மாறி இருப்பதற்கு முதல்வரின் நிர்வாக திறமை தான் என்று

கூறிய அவர், 5 ஆண்டுகளில் 146 கோடி நிதி வழங்கி உள்ளார் என்று 25405 ஏக்கர் நிலப் பரப்பில் பட்டு வளர்க்க நடவடிக்கை மேற்கொள்ளபட்டு உள்ளதாகவும் இதில் 16 ஆயிரம் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். பட்டு உற்பத்தியை அதிகரிக்க மானியங்கள் அதிக அளவில் வழங்கபட்டு வருவதாக கூறி அதனை பட்டியிலிட்டார். மேலும் அவர் கூறுகையில் அனைத்து துறைகளையும் மேம்படுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அனைத்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார் என்றும் தொழில் துறை முதலிடத்தில், ஜவுளி உற்பத்தியில் 50 சதவீதீத பங்களிப்பு, என அனைத்து துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருவதாக பெருமிததோடு கூறினார். 2030 ஆண்டுகளுக்குள் உலக அளவில் உள்ளது நாடுகள் போற்றும் வகையில் நம்பர் ஒன் மாநிலமாக மாற்றிட நடவடிக்கை மேற்கொண்டு வருகிறார். ஐ நா சபை மற்றும் பல உலக நாடுகளும் வியந்து பாராட்டும் வகையில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

நிகழ்ச்சியில் பட்டுவளர்ச்சி துறை இயக்குனர் சாந்தி, அரசு செயலாளர் அமுதவள்ளி, சேலம் மாநகர மேயர் ராமசந்திரன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில்

தமிழ்நாடு தலைகுனியாது - தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்–தயாநிதி மாறன் எம்.பி. சிறப்புரை

காஞ்சிபுரம், பிப்.2,

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி தி.மு.க. சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது - தேர்தல் பரப்புரை மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (3.2.2026-செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு, கலைஞர் திடல், ஹைவே - இன் எதிரில் மதுராந்தகத்தில் நைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். மதுராந்தகம் நகரக் கழகச் செயலாளர் கு.குமார் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

அச்சிறுப்பாக்கம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கே.கண்ணன், மதுராந்தகம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பி.எச்.சத்தியசாய், மதுராந்தகம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் பொன். சிவக்குமார், அச்சிறுப்பாக்கம் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ஜி.தம்பு, அச்சிறுப்பாக்கம் மத்திய ஒன்றியக் கழகச் செயலாளர் டி.வீ.கோகுலகண்ணன், கருங்குழி பேரூர் கழகச் செயலாளர் ஆ.சுந்தரமூர்த்தி, அச்சிறுப்பாக்கம் பேரூர் கழகச் செயலாளர் வி.டி.ஆர்.வி.எழிலரசன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக் கூட்டத்தில் மண்டல தேர்தல் பொறுப்பாளர்-அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தயாநிதி மாறன் எம்.பி. ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

மேலும் இக் கூட்டத்தில் தலைமைக் கழக சொற்பாழி வாளர்கள், நாகம்மை கருப்பையா, கலைச்செல்வி ஜெகநாதன், தலைமைக் கழக இளம் பேச்சாளர் தே.சிலம்பரசன் ஆகியோர் பேசுகின்றனர்.

இதில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி., ஓ.எஸ்.தினகரன், மலர்விழி குமார், செம்பருத்தி துரூகேஷ், எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், டி.ஆர்.நாராயணன், ஆர்.டி.அரசு, எஸ்.டி.பிரேம்சந்த், எஸ்.உசேன், டி.வி.ஸ்.தசரதரன், நந்தினி கரிகாலன், பி.ராஜாராம திருஷ்ணன்,எஸ்.மாலதி, கோ. வசந்தா, மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி நகர,ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதி ஒன்றியக் குழு உறுப்பினர்கள், மதுராந்தகம் நகர் மன்ற உறுப்பினர்கள், மதுராந்தகம் நகர வார்டு கிளைக் கழக செயலாளர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். நிறைவாகமதுராந்தகம் நகர தி.மு.க. விளையாட்டு மேம்பாட்டு அணி நகர அமைப்பாளர் கா.பாஸ்கர் நன்றி கூறுகிறார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியனிடம் நேற்று முகாம் அலுவலகத்தில் தெலுங்கானாவில் கடந்த ஜனவரி 27 முதல் 30 வரை மூன்று நாட்கள் நடைபெற்ற தேசிய அளவிலான 72வது Championship பெண்கள் சீனியர் கபடி போட்டி'யில் தமிழ்நாடு பெண்கள் கபடி அணியினர் வெற்றிபெற்று வெண்கலப் பதக்கம், ரூ.5 லட்சம் ரொக்கம் பெற்றதையடுத்து, கண்ணகிநகர் கார்த்திகா, சுஜி, ரிசிகா, மோனிகா ஆகியோர் கோப்பையை காண்பித்து வாழ்த்துப்பெற்றனர். 32 ஆண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு பெண்கள் கபடி அணியினர் இப்பதக்கத்தைப் பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

பிப்ரவரி 11-ஆம் தேதி திருவிடந்தையில் கோலாகலமாக நடைபெற உள்ள மண்டல பி.எல்.ஏ. 2, பி.எல்.சி. சந்திப்பு மாநாட்டில்

காஞ்சி வடக்கு மாவட்டத்தில் 30,000 பேர் அணிதிரண்டு பங்கேற்பு!

காஞ்சி வடக்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் முடிவு! மாவட்டச் செயலாளர் - அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

காஞ்சிபுரம், பிப்.2-

பிப்ரவரி 11ஆம் தேதி காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம், கோவளம் அருகே திருவிடந்தையில் நடைபெற உள்ள சென்னை விழுப்புரம் மண்டல BLA2, BLC சந்திப்பு மாநாட்டில் காஞ்சிபுரம் வடக்கு மாட்டத்திலிருந்து 30,000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட BLA2, BLC, BDA, BYO பங்கேற்க செய்வது என்று காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முடிவெடுக்கப் பட்டுள்ளதாக மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறியுள்ளார்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் தி.மு.கழக அவசர செயற்குழு உறுப்பினர்கள் கூட்டம் ஆலந்தூர் கத்திப்பாரா மேம்பாலம் அருகில் உள்ள மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் த.துரைசாமி தலைமையில் நடைபெற்றது. மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் இ.கருணாநிதி, எம்.எல்.ஏ., து.மூர்த்தி மற்றும் மாவட்ட கழகப் பொருளாளர் வெ.விசுவநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டச் செயலாளர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று பேசினார்.

தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைதியலிங்கம், எல்.இதயவர்மன், சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் பிரபு கஜேந்திரன், ரஃபி அகம்மது, பரிதி இளம்சுருதி, எஸ்.எம். கே.அண்ணாதுரை, காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஆ தி மா ற ன் , க.அன்புச்செல்வன், ஜி.சி.அன்புச்செழியன்,

பகுதி செயலாளர்கள் என். சந்திரன், பி.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த.ஜெயகுமார், டி.காமராஜ், பெருங்களத்தூர் சேகர், மாடம்பாக்கம் நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ. எஸ்.பெர்னாட்,

ஒன்றியச் செயலாளர்கள் ந.கோபால், எஸ்.டி.கருணாநிதி, பையனூர் எம்.சேகர், ஏ.வந்தேமாதரம், ஜி.கே.ரவி, எ ம் . டி . லோ க நா த ன் , திருமுடிவாக்கம் இ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், எஸ். ஜபருல்லா, கோ.சத்தியமூர்த்தி, எம்.கே.டி.கார்த்திக், ஆர்.சதீஷ் குமார், த.வினோத்குமார், பேரூர் செயலாளர்கள் மு. தேவராஜ், ஜி.டி.யுவராஜ்,

கழக மருத்துவ அணி துணைச் செயலாளர் மருத்துவர் கிருத்திகா தேவி, தலைமைப் பொதுக்குழு உறுப்பினர்கள் எம்.எஸ்.கே.இப்பிராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன், க.தேவேந்திரன், ஆர்.எஸ். சங்கர், மா.கணேஷ்பாபு, இரா. பாஸ்கரன், சே.அருள்தேவி, ஜீஜேந்திரன் ராமு உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

பிப்ரவரி மாதம் முழுவதும், தமிழகத்தில் 234 சட்ட மன்றத் தொகுதிகளிலும் நட்சத்திர பேச்சாளர்கள் உரையாற்றும் தீவிரமான தேர்தல் பரப்புரை கூட்டங்களை நடத்திட வேண்டும் என்று, நாம் நாளும் போற்றி வணங்கும் நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் முதல்வர் அவர்களின் அன்பு கட்டளையை ஏற்று

நம்முடைய மாவட்டத்தில் தலைமைக் கழகத்தால் அறிவிக்கப்பட்டுள்ள 6 சட்ட மன்றத் தொகுதிகளில் நடைபெறவுள்ள மாபெரும் தேர்தல் பரப்புரை பொதுக் கூட்டங்களில் 5000 க்கும் மேற்பட்ட கழகத்தினரையும் பொதுமக்களையும் பங்கேற்கச் செய்து மிகவும் எழுச்சியுடன் நடத்துவது என்றும்,

கலந்துரையாடல் கூட்டத்தை ஏற்பாடு செய்திடுக!

இப்பரப்புரை கூட்டங்கள் நடத்துவதற்கு முன்பு அன்று மாலை 5.00 மணியளவில் அருகில் உள்ள திருமண மண்டபத்தில் அந்த தொகுதியில் செல்வாக்கு மிக்க முக்கிய நபர்கள், இளைஞர்கள் மாணவர்கள் தன்னார்வ அமைப்புகள், கல்வியாளர்கள், தொழில்முனைவோர், தொழிற்சாங்க பிரதிநிதிகள், நலச்சங்க நிர்வாகிகள் ஆகியோர் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டத்தை ஏற்பாடு செய்திட வேண்டும் என்றும்,

அன்று நடைபெறும் பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் நட்சத்திர பேச்சாளர், இக்கலந்துரையாடல் கூட்டத்தில் பங்கேற்று திராவிட மாடல் அரசின் 5 ஆண்டு சாதனைகளை அவர்களிடம் விளக்கி கூறிடுவது என்றும், இக்கூட்டத்தில் கலந்து கொள்வோரின் கோரிக்கைகள், எதிர்பார்புகள் ஆகிய வற்றை அறிந்திட வேண்டும் என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க ஏகமனதாக தீர்மானிக்கிறது.

சென்னை விழுப்புரம் மண்டலத்தில் உள்ள 49 சட்ட மன்றத் தொகுதிகளில் அடங்கியுள்ள 1,50,000 க்கும் மேற்பட்ட BLA 2, BLC, BDA, BYO சந்திப்பு மாபெரும் மாநாடு வருகிற 11.2.2026 புதன்கிழமை அன்று மாலை 4.00 மணியளவில், நம்முடைய மாவட்டத்தில் ECR சாலையில் கோவளம் அருகில் அமைந்துள்ள திருவிடந்தையில் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் திடலில் மிகவும் பிரமாண்டமாக நடத்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மிகவும் எழுச்சியுடன் நடைபெறவுள்ள இம்மாநாட்டில் நம்முடைய காஞ்சி வடக்கு மாவட்டத்தில் உள்ள 30,000க்கும் மேற்பட்ட BLA 2, வாக்குச்சாவடி நிலைமுக வர்

கள், BLC வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள், BYO வாக்குச்சாவடி இளைஞர் அணி அமைப்பாளர், BDA வாக்குச்சாவடி தகவல் தொழில்நுட்ப அணி முகவர் உள்ளிட்டோரை அலைகடலென திரண்டு பங்கேற்க செய்து, மாற்றுக் கட்சியனரும் மிரண்டு போகும் வகையில், வருகிற 2026 ஆம் ஆண்டு தேர்தலில் மீண்டும் தி.முக தான் ஆட்சிக்கு வரும் என மக்கள் அனைவரும் எண்ணும் அளவிற்கு இந்த மாநாட்டை வெற்றி மாநாடாக மிகவும் எழுச்சியுடன் ஏற்பாடு செய்து நடத்திடுவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க ஒருமனதாக தீர்மானிக்கிறது.

கழக அரசின் சாதனைகளை விளக்கிக் கூறுவீர்!

தமிழ்நாட்டு மக்களுக்காக நாளும் நல்ல பல திட்டங்களை நிறைவேற்றி நாடும் நாட்டு மக்களும் மனம் மகிழ்ந்து போற்றி பாராட்டும் வகையில் திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி வரும் இந்தியாவில் No.1 Super முதல்வர் நம்முடைய ஒப்பற்ற தலைவர் தளபதி அவர்களின் 5 ஆண்டுகால பொற்கால ஆட்சியின் சாதனைகளை விளக்கி, மகளிர் வீடு வீடாக சென்று ஆட்சியின் சாதனைகள் பற்றிய துண்டு பிரசுரங்களை வழங்கி தேர்தல் பரப்புரையை மேற்கொள்ள வேண்டும் என்று நம்முடைய நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் அவர்களின் அன்புக் கட்டளையை ஏற்று,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள 2664 வாக்குச்சாவடிகளிலும், இன்று பிப்ரவரி 1ஆம் தேதி முதல் மார்ச் 8ஆம் தேதி வரை மகளிர் கள் வீடு வீடாக சென்று ஆட்சியின் சாதனை பற்றிய துண்டு பிரசுரங்களை வழங்கி, தேர்தல் பரப்புரையில் தீவிரமாக ஈடுபடுவது என்றும், பூத் வாரியாக இப்பிரச்சார பணியை மகளிர் இணைந்து மேற்கொள்ள அந்தந்த ஒன்றிய நகர பகுதி செயலாளர்கள் முன்கூட்டியே பிரச்சார பயணப் பட்டியலை தயார் செய்து,

அந்தந்த சட்டமன்றத் தொகுதிக்கு நியமனம் செய்யப்பட்டுள்ள மகளிர் தொகுதி பொறுப்பாளர்களிடம் தந்து அந்த தொகுதி பொறுப்பாளர்கள் பூத் மகளிர் தேர்தல் பணிக் குழுவினருடன் இணைந்து மகளிர் தேர்தல் பரப்புரை வெற்றிகரமாக நடத்துவது என்றும் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க ஏகமனதாக தீர்மானிக்கிறது.

தலைவர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவீர்!

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தரப்பு மக்களும் மனம் மகிழ்ந்து பாராட்டுகின்ற வகையில், திராவிட மாடல் நல்லாட்சி நடத்தி - இந்தியாவிற்கே வழிகாட்டும் வகையில் எண்ணிலடங்கா திட்டங்களை நிறைவேற்றி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற வரலாற்றுச் சாதனையை படைத்த நம்முடைய உயிரினும் மேலான அன்புத் தலைவர் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் 73வது பிறந்த நாளை காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் முழுவதும் பட்டி தொட்டியெங்கும் மிகவும் சிறப்பான வகையில் வருகிற மார்ச் மாதம் முழுவதும் எழுச்சியுடன் கோலாகலமாக கொண்டாடுவது என்றும்,

அவரது பிறந்த நாளான 1.3.2026 அன்று காலை 9.00 மணிக்கெல்லாம், காஞ்சி வடக்கு மாவட்டம் முழுவதும் உள்ள ஒன்றியம் பகுதி நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளைக் கழகங்களிலும், கழக கொடி தோரணங்கள்கட்டி, ஒலிபெருக்கி அமைத்து கழகக் கொடி தோரணங்களை அழகுற கட்டி, ஒலிபெருக்கி அமைத்து, கழக கொடியேற்றி, இனிப்புகளை வழங்கிடுவது என்றும் நம்முடைய மாவட்டத்தில் உள்ள 40க்கும் மேற்பட்ட ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ள ஆதரவற்றோர்களுக்கு அன்று மதிய உணவு உடைகளை வழங்கிடுவது என்றும், காஞ்சிபுரம் வடக்கு மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

நம்மையெல்லாம் ஆளாக்கிய "காஞ்சி தந்த காவியத் தலைவன்", "தென்னாட்டு காந்தி", "இந்நாட்டு இங்கல்சால்" என்று அனைவராலும் போற்றி புகழப்படும் அரசியல் மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான வருகிற பிப்ரவரி 3ஆம் தேதி அன்று காலை நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றிய நகர பகுதி பேரூர்களில் அறிஞர் அண்ணாவின் திருவுருவப் படத்தினை அலங்கரித்து வைத்து கழகத்தினர் அனைவரும் திரண்டு மலர் அஞ்சலி செலுத்திடுவது என்றும்,

அன்று காலை சென்னையில் நம்முடைய கழகத் தலைவர் முதல்வர் அவர்கள் தலைமையில் நடைபெறும் அண்ணா நினைவு நாள் அமைதிப் பேரணியில் நம்முடைய காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத்தினர் பெருமளவு திரண்டு பங்கேற்பது என்றும் ஒருமனதாக தீர்மானிக்கிறது.

இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று (01.02.2026) கோவை மாவட்டம், மருதமலை சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் பக்தர்களின் வசதிக்காக ரூ. 5.20 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ள 4 மின்தூக்கிகளை பக்தர்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்தார். உடன் அரசு அதிகாரிகள் உள்ளனர்.